1968 ஆகஸ்ட் 21] [Thiru K. Vinayakam]

Brigade', there was talk about "வெண் புறு" and the Hon. Chief Minister jocularly remarked that as that were "புறுக்கள்" they might have flown. That does not satisfy the questioner or the people who want more information. So I request the Hon. Deputy Speaker to allot one hour to debate on "Prosperity Brigade" as well as "anti Prosperity Brigades."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பேரவையிலே மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டு, நான்கு நாட்கள் விவாதத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சமயத்தில் அந்தக் கருத்துக்களை யெல்லாம் சொல்லிக் கொள்ளலாம். இப்பொழுது உங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாததற்கு வருந்துகிறேன்.

4. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

வட ஆர்க்காடு தேசிய உழவர்களின் அமைதியான போராட்டமும் திரு. சகாதேவக் கண்டர் உண்ணுவிரதமும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்தபடியாக, திரு. கே. விநயகம் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

"To discuss about the peaceful agitation launched by national agriculturists of North Arcot headed by Thiru S. M. Annamalai, who was arrested and released later on 17th August 1968 and on 19th August 1968 headed by Sri K. Sahadeva Kandar, M.L.A., who subsequently went on fasting before the Fort St. George."

இது அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டதாகும். சத்தியாக்கிரகம், உண்ணுவிரதம், கைது செய்வது போன்றவற்றிற்காக ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டு, பேரவையில் அதை அனு மதித்துத் தீர்ப்புக் கொடுக்கப்பட்டதாக இல்லை. இது அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாகையால் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, ஒரு நாளைக்கு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்தான் கொண்டு வரலாம் என்ற விதி இருந்து வருகிறது. மூன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்கள். கொண்டுவர, பேரவை அனுமதியளிக்கத் தீர்மானம் கொண்டுவரும்படி, அவை முன்னவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,

"விதி 41 (3)-ன் படி, ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவர தடை இருப்பதை இன்று தளர்த்த வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.